முச்சந்தி முரளி



"அப்ப இதுக்கு மேலால என்ன தில்லுமுல்லு செய்யலாம் எண்டு ரணிலார் பிளான் போடப்போறார் பாருங்கோ"

Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 242

வியாழக்கிழமை
25 ஜூலை 2024

ஆடி 09 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

பொலிஸ்மா அதிபராகச் செயற்பட

# தேசபந்து தென்னக்கோனுக்கு உயர்நீதிமன்றத்தால் தடை!

ரணிலுக்கு விழுந்தது 'குட்டு'



கொழும்பு, ஜூலை 25

பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் செயற்படுவதற்கு உயர்நீதிமன்றம் நேற்றுப் புதன்கிழமை இடைக்காலத் தடை விதித்துள்ளது.

11

## ஜனாதிபதித் தேர்தலின் திகதி இன்று அறிவிப்பு?

கொழும்பு, ஜூலை 25

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவால் இன்று அறிவிக்கப்படலாம் என்று கருதப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், தேர்தல்கள் ஆணைக் குழுவினர் இது தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இன்று ஒன்றுகூடவுள்ளனர். இதன்போது, தேர்தல் திகதி

11

தென்னக்கோனுக்குத் தடை

## அமைச்சரவை நேற்று அவசரமாகக் கூடியது

இரண்டு நாள்களுக்குள் பதிலாம் ஜனாதிபதி தலைமையில் முடிவு

கொழும்பு, ஜூலை 25

பொலிஸ்மா அதிபராகத் தேசபந்து தென்னக்கோன் செயற்படுவதற்கு உயர்நீதிமன்றத்தால் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் அமைச்சரவையை அவசரமாகக் கூட்டி இது தொடர்பான கலந்துரையாடல்களில்

11

நெல்லை உலரவிட்டு

## காவலிருந்தவர் மீது துப்பாக்கிச் சூடு!

முல்லைத்தீவில் பரபரப்பு

முல்லைத்தீவு, ஜூலை 25

அறுவடைசெய்த நெல்லை வீதியில் உலரவிட்ட பின்னர், அதற்குக் காவல் காத்துக்கொண்டிருந்தவர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - கல்விளான் பகுதியைச் சேர்ந்த செல்லையா கிருஸ்ணராஜா (வயது - 42) என்பவர் மீதே இவ்வாறு துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

காயமடைந்தவர் மல்லாவி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவ

11

## வழக்குக்காக வந்தவரை அச்சுறுத்தியவர் நேற்றுக்கைது

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்காக வந்துவிட்டுத் திரும்பிய

11



## பொலிஸார் எனக்கூறி ரூபா 300,000 அபேஸ்

இளவாலையைச் சேர்ந்தவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 25

தன்னைப் பொலிஸார் என்று போலியாக அடையாளப்படுத்தி, 3 இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

11

## பொதுத்தேர்தல் இப்போதில்லை!

அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

வரவு - செலவுத் திட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலுக்கு மாத்திரமே நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வருடத்தில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கு

11

## தமிழர்களின் வாக்குகள் சஜித்துக்கே கிட்டுமாம்!

திஸ்ஸ அத்தநாயக்க நம்பிக்கை

கொழும்பு, ஜூலை 25

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டாலும் வடக்கு - கிழக்கு மக்களின் பெரும்பான்மையான வாக்குகள் சஜித்துக்கே கிட்டும் என்று

11


## சா/த பெறுபேறு செப்ரெம்பரில்!

கொழும்பு, ஜூலை 25

2023ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் செப்ரெம்பர்

11





அச்சுறுத்தல்களுக்கு மத்தியில்

## செம்மலைப் பிள்ளையாருக்கு நேற்றுப் பொங்கல் எழுச்சி!

முல்லைத்தீவு, ஜூலை 25

விசாரணை மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியிலும் முல்லைத்தீவு பழையசெம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் விழா நேற்றுப் புதன்கிழமை நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்கேற்புடன்

11

ஜனாதிபதித் தேர்தல்

## யாருக்கு வாக்களிப்பது என்று தமிழரசு விரைவில் அறிவிப்பு!

சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில், பிரதான வேட்பாளர்களுடன் பேரம்பேசி உரிய முடிவை இலங்கைத் தமிழரசுக் கட்சி

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச நிறுவன சொத்துகள் பகுப்பாய்வுகள் விரைவில்

## அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஜூலை 25

அரச சொத்துகள் முகாமைத்துவ சட்டத்தின் ஊடாக இலங்கையிலுள்ள அனைத்து அரச நிறுவனங்களின் சொத்துகளையும் பகுப்பாய்வுக்குட்படுத்தி முகாமைத்துவத்தின் கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

1600க்கும் மேற்பட்ட அரசாங்கத்துக்குச்சொந்தமானநிறுவனங்கள் உள்ளன. அவற்றின் சொத்துகள் சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை.

அந்த நிறுவனங்களின் நிலையான சொத்துகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தி அவற்றை முறையாக முகாமைத்துவம் செய்து மக்களுக்குப் பயனுள்ள சேவையை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் முன்வைக்கப்பட்ட இது தொடர்பான சட்வரைவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# சிறைக்கைதிகளுக்கு நிர்வாணசோதனை

## எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜூலை 25

நீதிமன்ற விசாரணைக்குச் சென்று சிறைக்கு திரும்பும் ஆண் மற்றும் பெண் கைதிகள் நிர்வாணமாக சோதனைக்குட்படுத்தப்படுகிறார்கள் என எதிரணி உறுப்பினர் ரோஹன பண்டார நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

-இவ்வாறு சோதனை செய்யும்போது கைதிகளின் சுயகௌரவமும், உளவியலும் பாதிக்கப்படும். நவீன தொழில்நுட்பம் காணப்படுகின்ற நிலையில் முறையான வகையில் சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச,

சிறைச்சாலை தொடர்பில் இவர் குறிப்பிட்ட கருத்து கீழ்த்தரமானது. இந்தக் கருத்தினால் சிறைச்சாலை அதிகாரிகள் மிக மோசமானவர்கள் என்று சித்திரிக்கப்படுகிறது. அவ்வாறான முறையற்ற செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தால் அந்த விவரங்களை சமர்ப்பிக்குக. அதற்கு எதிராக உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். விவரங்களை வழங்க முடியாது என்றால் நீங்கள் பொய்யுரைக்கின்றீர்கள் - என்றார். (ச-இ)

# தூதுவிடும் ரணில்

கொழும்பு, ஜூலை 25

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு வழங்குமாறுகோரி ஸ்ரீலங்காப் பொதுஜன பெரமுன கட்சி, இலங்கைத் தமிழரசுக் கட்சி உட்படப் பல பிரதான கட்சிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடிதம் அனுப்பவுள்ளார் என நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல் ஆணைக்குழு அதிகாரபூர்வமாக வெளியிட்டபின்னர், ஜனாதிபதியால் மேற்படி கடிதம் கட்சிகளுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடமும் ஜனாதிபதி எழுத்து மூலம் ஆதரவு கோருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதியின் இந்த கடிதம் கிடைத்த பின்னரே தமது கட்சியின் நிலைப்பாட்டை பகிரங்கப்படுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. (ச-44)

# குறைந்தபட்ச வேதனம் 17,500 ரூபாவாக அதிகரிப்பு




கொழும்பு, ஜூலை 25

தொழிலாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் ஒப்புதல் அளித்துள்ளது. அதனை வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தனியார்துறை வேலையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனத்தை 17, 500 ரூபா வரைக்கும், தேசிய குறைந்த பட்ச நாள் சம்பளத்தை 700 ரூபா வரை அதிகரிக்கக்கூடிய வகையில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ச-6)

# சர்வஜனக் கூட்டணியின் வேட்பாளர் அடுத்தமாதம்

கொழும்பு, ஜூலை 25

கடும் போக்குடைய சிங்கள தேசியவாதக் கட்சிகளும், அமைப்புகளும் அங்கம் வகிக்கும் சர்வஜனக் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி பெயரிடப்படவுள்ளார்.

கூட்டணியில் அங்கம் வகிக்கும் பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில இந்த தகவலை வெளியிட்டுள்ளார். ஜனாதிபதி தேர்தல் மற்றும் வேட்பாளர் தொடர்பில் தீர்மானிக்க எதிர்வரும் 4 ஆம் திகதி விசேட கூட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தக் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)

# தமிழ்ப் பொதுவேட்பாளர் பேரம் பேசும் யோசனை

## கூறுகிறார் ஹக்கீம்

கொழும்பு, ஜூலை 25

தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவார் என நான் நம்பவில்லை. மாறாக பிரதான வேட்பாளர்களுடன் பேரம் பேசும் நோக்கில் அந்த யோசனை முன்வைக்கப்பட்டிருக்கலாம் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தமிழ்க் கட்சிகள் சில இணைந்து பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தப்போவதாக அறிவித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப்போவதாக தற்போது அறிவித்துள்ள பிரதான வேட்பாளர்களுடன் பேரம் பேசும் நோக்கில் மேற்படி யோசனை முன்வைக்கப்பட்டிருக்கலாம்.

அவர்கள் வேட்பாளர் ஒருவரை நிறுத்தும் நோக்கில் அதனைச் செய்திருக்கமாட்டார்கள் என நம்புகின்றேன் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-44)



# தமிழ்ப் பொதுவேட்பாளர் மூக்கை நுழைக்காதீர்

## முன்னாள் எம்.பி. கணகராஜ் வேண்டுகோள்

கொழும்பு, ஜூலை 24

ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கும் முடிவை வடக்கு, கிழக்கு தலைமைகள் எடுத்துள்ளன. இவ்விடயத்தில் தென்னிலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகளின் தலைமைகள் மூக்கை நுழைத்து தமிழ்ப் பொது வேட்பாளர் நோக்கத்தைக் கொச்சைப் படுத்தக்கூடாது.

-இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பிரதித் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான கணபதி கனகராஜ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரைக் களமிறக்கும் நோக்கத்தை மலையகத் தலைமைகள் கொச்சைப்படுத்தக்கூடாது. இது தேவையற்ற வெறுமனே மூக்கை நுழைக்கும் விடயமாகும். வடக்க,கிழக்கு மக்களின் கோரிக்கைக்கு உதவாவிட்டாலும் பரவாயில்லை, அவர்களுக்கு உபத்திரம் கொடுப்பதாக இருக்கக்கூடாது.

உரிமைக் கோரிக்கையுடன் அபிவிருத்தி எதிர்பார்ப்புடனும், இனங்களுக்கு இடையிலான ஐக்கியத்தைப் பேணும் வகையிலும் நாம் அரசியல் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்- என்றார். (ச-44)

# 'கிளப் வசந்த' கொலை இருவர் கைதாகினர்



கொழும்பு, ஜூலை 25

'கிளப் வசந்த' உட்பட இருவரைக் கொன்ற துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய சந்தேகநபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்புப் பிரிவின் அதிகாரிகளால் சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் 26 மற்றும் 36 வயதுடைய வெலிபன்ன மற்றும் அஹுங்கல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பெருந்தோட்ட நிறுவனங்கள் அழுத்தம்

# 1,700 ரூபா ஊதியம் வர்த்தமானி இரத்து

**கொழும்பு, ஜூலை 25**

**பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த சம்பளமாக 1,700 ரூபா வழங்கப்படவேண்டும் எனத் தெரிவித்து தொழில் அமைச்சின் செயலாளர் வெளியிட்டிருந்த அதிவிசேட வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.**

கடந்த மே மாதம் 21ஆம் திகதி பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாளாந்த அடிப்படைச் சம்பளமாக 1,350 ரூபாவும் விசேட கொடுப்பனவாக 350 ரூபாவும் மேலதிக கொழுந்து கிலோகிராம் ஒன்றுக்கு 80 ரூபா வீதம் வழங்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டு தொழில் அமைச்சின் செயலாளர் ஆர். பி. ஏ. விமலவீரவால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது.

பெருந்தோட்ட நிறுவனங்கள் நீதிமன்றத்தை நாடியதன் அடிப்படையில் குறித்த வர்த்தமானி அறிவித்தலுக்கு உயர்நீதிமன்றம் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது. இந்தநிலையில் அதனை இரத்துச் செய்து இம்மாதம் 10ஆம் திகதியிடப்பட்ட புதிய அதிவிசேட வர்த்தமானியை வெளியிட்டுள்ளார்.

அதன்படி முன்னதாக முன்மொழியப்பட்ட பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த வேதனம் குறைக்கப்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



### அமெரிக்கா

## ஏவுகணை அழிப்பு கப்பல் வந்தடைவு

கொழும்பு, ஜூலை 25

அமெரிக்க கடற்படையைச் சேர்ந்த யு.எஸ். எஸ். மைக்கல் மர்பி என்ற ஏவுகணை எதிர்ப்புக் கப்பல் உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்றுமுன்தினம் வந்துள்ளது. 155 மீற்றர் நீளமுள்ள, இந்தக் கப்பல் 323 பேர் கொண்ட குழுவினரால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தக் கப்பல் நாளை இலங்கையில் இருந்து புறப்படவுள்ளது. (ச-6)

## தங்க நகை அடகுக்கு அரசால் வட்டிமானியம்

கொழும்பு, ஜூலை 25

வங்கிகளில் தங்க நகைகளை அடகு வைத்துள்ளவர்களுக்கு வட்டி மானியம் வழங்க ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

பொருளாதார நெருக்கடியால் தங்க நகைகள் அடகு வைக்கப்படுவது வேகமாக அதிகரித்துள்ளது. 2019 ஆம் ஆண்டில் சுமார் 210 பில்லியன் ரூபாவாக இருந்த அடகு முற்பணங்களின் நிலுவைத் தொகை, 2024 ஆம் ஆண்டின் மார்ச் மாதத்தில் 172 வீதம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் ஜூன் 30, அல்லது அதற்கு முன் உரிமம் பெற்ற வங்கிகளிலிருந்து தனிநபர் அடிப்படையில் வாடிக்கையாளர்கள் பெற்ற ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமாக அடகு முற்பணங்களுக்கு, ஆண்டுக்கு அதிகபட்சமாக 10 வீதத்துக்கு உட்பட்டு, வட்டி மானியம் வழங்கப்படவுள்ளது. (ச-இ)



## இந்தியாவின் பாதீட்டில் இலங்கைக்கு அதிக நிதி

கொழும்பு, ஜூலை 25

இந்திய மத்திய அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2024- 25 பாதீட்டில் இலங்கைக்கு 245 கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட 150 கோடியை விட 95 கோடி ரூபா அதிக தொகையாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூடுதல் நிதியுதவி பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பூட்டான், மியன்மார், மொரீஸியஸ், பங்களாதேஸ் மற்றும் மங்கோலியா போன்ற நாடுகளுக்கான நிதியுதவிகளை இந்தியா குறைத்துள்ளது. (ச-இ)

## போலந்தில் வேலை

கொழும்பு, ஜூலை 25

இலங்கை தொழிலாளர்களுக்கு இலக்கு துறைகளில் வேலை வழங்குவது தொடர்பில் போலந்து அவதானம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இரு அரசுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தின் கீழ் போலந்து வேலை வாய்ப்புகளை வழங்க திட்டமிட்டுள்ளது. போலந்துக்குப் பயணத்தை நிறைவு செய்த பின்னர் அமைச்சர் அலி சப்ரி, தனது 'எக்ஸ்' வலைத்தளத்தில் இந்த விடயத்தை பதிவிட்டார். (ச-இ)

## வட்டி வீதம் குறைப்பு!

கொழும்பு, ஜூலை 25

மத்திய வங்கியின் நிலையான வைப்பு வசதி வீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதம் ஆகியவற்றை முறையே 25 அடிப்படை புள்ளிகளால் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கை மத்தியவங்கியின் நாணயச் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மத்தியவங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, நிலையான வைப்புவசதிவீதம் மற்றும் நிலையான கடன் வசதி வீதங்கள் முறையே 8.25 சதவீதம் மற்றும் 9.25 சதவீதமாக குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ச)

## தினம் பு தெரியுமோ?

நேற்று ஒப்பீஸுக்கு ஒரு ரெலிபோன் கோல். அங்காலிப் பக்கம் கதைச்சது சாவகச்சேரி ஆஸ்பத்திரியில இப்ப அத்தியட்சகரா இருக்கிற டாக்குத்தர் ரஜீவ். 'பட்சிக்கு எல்லாம் தெரியுமெண்டு நினைச்சால், இப்பிடி போட்டிருக்கிறீங்களே?' எண்டு நேற்றையான் பட்சியில சொன்ன விசயத்தைப் பற்றிக் கவலைப்பட்டார்.

'அப்ப அண்டைக்கு மட்டத்தேள் கடிச்சவருக்கு நடந்த விசயம் பொய் எண்டு சொல்லுறீங்களோ?' எண்டு ஒப்பீஸ்காரர் கேட்டவை. அதுக்கு அவர், 'அது உண்மைதான். ஆனால் அங்க டொக்டர்மார் இல்லையெண்டு சொன்னது பிழையான தகவல். இப்ப அவசர சிகிச்சைப் பிரிவை பின்பக்கம் மாத்திட்டம். அதால முன்பக்க கண்ணாடிக்கதவு சாத்தித் தான் இருக்கும். வருத்தக்காரர் வந்தால், அதைத் திறந்துகொண்டு பின்பக்கம் வந்தால் அவைக்கு ட்ரீட்மெண்ட் செய்வம். வருத்தக்காரர் வரேக்கை அவையை கதவைத் திறந்து, அவசர சிகிச்சைப் பிரிவுக்கு கூட்டிக்கொண்டு வாறதுக்கு சிற்றூழியர்மார் நிப்பினம். ஆனா அண்டைக்கு செக்கியூரிட்டியும் இல்லை, சிற்றூழியர்மாரும் இல்லை. அதாலதான் மட்டத்தேள் கடிச்சு வந்தவை ஆக்கள் ஒருத்தரும் இல்லை எண்டு திரும்பிப் போயிருக்கினம். நாங்கள் அண்டைக்கு அவை வர முதலும் ஓராளுக்கு ட்ரீட்மெண்ட் செய்தம். அதுக்குப் பிறகு ஒரு மணி போலவும் இன்னொரு ஆளுக்கு ட்ரீட்மெண்ட் செய்திருக்கிறம். அதால அண்டைக்கு டொக்டர்மார் லீவு, அவை அங்க நிக்கேலை எண்டு சனம் கதைக்கிறதெல்லாம் எங்களுக்கு கவலையா இருக்கு. ஆஸ்பத்திரியை நல்லபடியா நடத்தோனும் எண்டு நினைக்கிறம். அதுக்கு மீடியாக்களும் சப்போர்ட் பண்ணி உண்மையை எழுதவேணுமெல்லோ' எண்டு ஆதங்கப்பட்டிருக்கிறார்.

அவர் சொன்ன தகவலை பட்சியும் ஒருக்கா ரவுண்டடிச்சு விசாரிச்சுப் பார்த்திச்சுது. அண்டைக்கு டாக்குத்தர்மார் அங்க நிண்டது உண்மைதான். ஆனால் செக்கியூரிட்டியும், சிற்றூழியர்மாரும் வருத்தக்காரர் வாறநேரமெண்டு பார்த்து அங்க நிக்காததால, ஆஸ்பத்திரியில ஆருமே இல்லையெண்ட மாதிரி எல்லாரையும் நினைக்க வைச்சிட்டுது. முந்தி அப்பிடி டாக்குத்தர்மார் நிக்காததால இப்பவும் அதேகதைதான் தொடருது எண்டு சனமும் நினைச்சிட்டுதுகள். இனிமேல் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்கு போறவை முன்னுக்கு ஆக்கள் இல்லாட்டி, பஞ்சியைப் பாக்காமல் ஒருக்கா முன்பக்கக் கண்ணாடிக்கதவைத் திறந்து, பின்பக்கமா இருக்கிற அவசர சிகிச்சைப் பிரிவையும் எட்டிப்பாருங்கோ. எல்லாப்புகழும் இறைவனுக்கே என்டுறமாதிரி, எல்லாப் பழியையும் டாக்குத்தர்மாரின்ர தலையில கட்டிவிடுறதும் பிழைதானே?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலைதீவு மருத்துவமனை குறைபாடுகள் ஆராய்வு

**யாழ்ப்பாணம், ஜுலை 25**

**அனலைதீவு பிரதேச மருத்துவமனையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாகாண சுகாதார சேவைகள் செயலாளர் மற்றும் அரச உத்தியோகத்தர்கள் உள்ளடங்கிய குழு ஒன்று நேற்றுமுன்தினம் நேரில் சென்று ஆராய்ந்துள்ளது.**



இதன்போது மருத்துவமனையில் காணப்பட்ட அடிப்படைத் தேவைகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டன.

அம்புலன்ஸ் தேவைப்பாடு, மருத்துவமனையின் ஆளணிப் பற்றாக்குறை, மருத்துவ உபகரணங்கள் பற்றாக்குறை, மருத்துவமனையின் உள்ளகத் திருத்த வேலைகள் உள்ளிட்ட தேவைப்பாடுகள் தொடர்பில் கேட்டறியப்பட்டன. அவற்றில் கோரிக்கைகள் மிக்ககுறுகிய காலத்தினுள் நிறைவேற்றப்படும் என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் உறுதியளித்தார். (ச- 9)

## மழலைகள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜுலை 25

மாதகல் புனித தோமையார் முன்பள்ளி மழலைகளின் திறன் வெளிப்பாட்டு விழா இன்று வியாழக்கிழமை மாலை 3 மணியளவில் மாதகல் புனித தோமையார் ஆலய முன்றலில் மாதகல் பங்குத்தந்தை அருட்தந்தை எஸ்.றோய் பேடினன் அடிகளார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரான்ஸ் மாதகல் புனித தோமையார் ஒன்றியத்தின் செயலாளர் திருமதி அகஸ்ரின் மேரி பற்றிசியா பிரதம விருந்தினராகவும், யாழ்.மாதகல் சென்.ஜோசப் மகா வித்தியாலயத்தின் அதிபர் எஸ்.புஸ்பராங்கன், மாதகல் அன்புக் கன்னியர் இல்லத்தின் தலைவி அருட்சகோதரி யோகராணி ராஜரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-66)

## கொழும்புத்துறை இந்து ம. வி. 150 ஆவது ஆண்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜுலை 25

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் 150 ஆவது ஆண்டு நிகழ்வும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை தவத்திரு யோகர்சுவாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பாடசாலை அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண பிரதம செயலாளர் இ.இளங்கோவன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

தொடர்ந்து மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளன. அதில் முதன்மை விருந்தினராக யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.வாசுதேவன் பங்கேற்கவுள்ளார். (ச-17)

## ஆன்மீகக் கற்கைக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜுலை 25

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இந்துக் கற்கைகள் நிறுவகத்தின் ஊடாக நடத்தப்படும் ஆன்மீகப் பிரசாரகர் அடிப்படைச் சான்றிதழ் கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பமாகவுள்ளது. கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கற்கைநெறியில் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள், மேற்படி முகவரியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்தில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுப் பூர்த்திசெய்து பதிவுத்தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களுக்கு க.சிந்தூரன் 077 677 6249, சுகன்யா மகாதேவா 0752626981 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளமுடியும் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ப)

## நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜுலை 25

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் யாழ்.மாவட்ட சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு யாழ்ப்பாணம் பிரதான வீதியில் உள்ள கலைத்தூது மண்டபத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. தலைவராக சிவபாதம் இளங்கோதையும், உப தலைவராக சு. கஜேந்திரனும் செயலாளராக நி. மேரி ரஞ்சினியும், உப செயலாளராக புஸ்பலதாவும், பொருளாளராக விஜயபாமாவும் தெரிவு செய்யப்பட்டனர். (ச-25-20)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜுலை 25

இந்து சமயப் பேரவையின் ஏற்பாட்டில் பேரவையின் தலைவர் ஈசான சிவசக்திகிரீவன் தலைமையில் 9 ஆம் திருமுறை நூல் வெளியீட்டு விழா யாழ். இந்து சமயப் பேரவை நடராஜர் மண்டபத்தில் எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. நிகழ்வில் உதயன் குழுமத் தலைவரும், தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், முன்னாள் கல்விப்பணிப்பாளர் கு. சரவணபவானந்தன், கல்வியியற்கல்லூரி விரிவுரையாளர் சிவத்திரு. கு. பாலஷண்முகன், கலாபூஷணம் சிற்றம்பலம் சிவஞானராசா, நல்லூர்ப்புனித ஷேத்ர வேதசிவாகமநிபுண பிரம்மசிறி விஸ்வப் பிரசன்ன சிவாசாரியார், கோப்பாய்சிவ வேத சிவாகமநிபுண பிரம்மசிறி ப. சிவானந்த சர்மா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-25)

## சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜுலை 25

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் வாராந்தச் சுக்கிரவாரச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு சிவநெறிப் பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

'கதிர்காமப் பெருமானே' எனும் விடயப்பொருளில் சைவப் புலவர், பிரசங்க பூஷணம் க. கைலநாதனின் சிறப்புச்சொற்பொழிவு இடம்பெறவுள்ளது. (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். நீண்டநாள் விருப்பத்தை நிறைவேற்றி மகிழ்வீர்கள். மனதில் தன்னம்பிக்கை அதிகரித்து, உற்சாகம் பெருக்கெடுக்கும். எதிர்காலத்துக்குப் பயன் தரும் வகையில் பிரமுகர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**இடபம்:** தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும். புதிய முயற்சிகளைத் தவிர்த்து விடுவது நல்லது.

**மிதுனம்:** புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு வாழ்க்கைத்துணையுடன் கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். பொறுமையை கடைப்பிடிக்கவும்.

**கடகம்:** திடீர் செலவுகள் ஏற்படும். தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். கடன்கள் விடயத்தில் கவனம் தேவை.

**சிம்மம்:** உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணை உங்கள் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தருவார். அவர்மூலம் தேவையான உதவிகளும் கிடைக்கும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். தொல்லைகள் விலகும்.

**கன்னி:** குடும்பத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். வீண்செலவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. மற்றவர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம். தடைகள் விலகும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும். சகோதரர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். உழைக்கவேண்டி வரும்.

**விருச்சிகம்:** மனதில் இனம் தெரியாத சோர்வு ஏற்படக்கூடும். செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பதில் தாமதம் ஏற்படும். உடல் அசதி ஏற்படும். முருகப்பெருமானை வழிபடுவதன் மூலம் நன்மைகள் அதிகரிக்கும்.

**தனுசு:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தை வழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். மகிழ்ச்சி உண்டாகும். கணவன் கருத்து வேறுபாடு நீங்கும்.

**மகரம்:** சங்கடங்கள் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சிலருக்கு தெய்வப்பணிகளில் பங்கேற்கும் வாய்ப்பு ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். பிரச்சினைகள் தீரும். காரியம் சாதகமாக முடியும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் எதிலும் ஈடுபட வேண்டாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பிரச்சினைகள் ஏற்படக்கூடும். கணவன் தாய்வழி உறவினர்களால் செலவுகள் ஏற்படும். வியாபாரத்தில் எதிர்பாராத செலவுகள் ஏற்படலாம்.

**மீனம்:** மகிழ்ச்சியான நாள். மன உறுதியுடன் செயற்படுவீர்கள். எதிர்பாராத பண இலாபம் உண்டாகும். கடன்களில் ஒரு பகுதியைத் தந்து முடிக்கும் வாய்ப்பு ஏற்படும். வாழ்க்கைத் துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## மக்களுக்குத்தேவை தெளிவூட்டல்

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் வடக்கிலும், தெற்கிலும் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. தெற்கில் இம்முறை மும்முனைப் போட்டி ஏற்பட்டிருக்கும் நிலையில், வடக்கில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கரு வலுப்பெற்றிருக்கின்றது. இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களின் அபிலாஷைகளை வலியுறுத்தவேண்டும் என்ற கருத்து தமிழ்த் தரப்புகளிடையே வலுப்பெற்றிருக்கின்றது. கடந்த காலங்களில் சிங்களத் தலைமைகளின் வாக்குறுதிகளை நம்பி வாக்களித்த தமிழ் மக்கள் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டிருந்தனர். இம்முறையும் அந்தத் தவறைச் செய்யாது தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்கி, ஒற்றுமையுடன் தமிழ் மக்களின் கோரிக்கைகளை உலகறியச் செய்யும் முயற்சி எடுக்கப்பட்டிருக்கின்றது. தமிழ்த் தரப்பில் இருந்து முன்னெடுக்கப்படும் இந்த முயற்சியை வரவேற்கும் அதேநேரம், தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவைச் செயற்படுத்தி முடிப்பதும் இலகுவானதாக இருக்கப்போவதில்லை. அனைத்துத் தரப்புக்களையும் ஒன்றிணைத்துப் பயணித்தால் மட்டுமே இந்த முயற்சி எதிர்பார்த்த வெற்றியைப்பெறும் என்கின்றநிலையில், குறுகிய காலத்தில் அனைத்துத் தரப்புக்களையும் ஒரு புள்ளிக்குக் கொண்டுவருவது சவாலாகவே இருக்கும். தெற்கில் இம்முறை ஏற்பட்டிருக்கும் மும்முனைப் போட்டியால் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்வதற்குத் தெற்கில் இருந்து கடும் முயற்சிகள் எடுக்கப்படும் என்பது திண்ணம். தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற எண்ணக்கருவை, முளையிலேயே கிள்ளியெறியும் முயற்சிகள் தெற்கில் இருந்தும் வலுவாக முன்னெடுக்கப்படத் தொடங்கிவிட்டன.

இத்தகைய சூழமைவில் தமிழ்ப்பொதுவேட்பாளர் என்ற முயற்சியை முன்னெடுக்கும் தரப்புகள் இந்த விடயத்தில் இன்னமும் வேகத்தைக் காட்ட வேண்டியிருக்கின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னமும் சில மாதங்களே இருக்கும் நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் ஜனாதிபதித் தேர்தல் பற்றியோ, தமிழ்ப் பொது வேட்பாளர் பற்றியோ எந்தப் புரிதலும் இல்லாத நிலையே காணப்படுகின்றது. அண்மையில் சாதாரண பொதுமக்களிடம் எமது ஊடகம் கருத்தறிய முனைந்த போது, ஒரு சிலர் தமிழ்ப்பொதுவேட்பாளர் என்பவர் 'மாகாண முதலமைச்சர்' என்பதை அர்த்தப்படுத்துவதாக நினைத்து, அதன் அடிப்படையிலேயே தமது எண்ணத்தை வெளிப்படுத்தியிருந்தனர். எனவே தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற எண்ணக்கரு எப்படிப்பட்டது? இந்த முயற்சியின் பின்னால் இருக்கும் தமிழினத்தின் கோரிக்கைகள் எவை? தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முயற்சியினூடாக நாம் அடையப்போகும் சாதகங்கள் எவை? அவற்றினூடாக எமது இனவிடுதலைக்கான குரலை எப்படி சர்வதேச அரங்கில் ஒலிக்கவைக்கமுடியும்? என்பன குறித்த தெளிவூட்டல்களை வழங்கவேண்டும். ஏனெனில் மக்கள் எடுக்கும் தீர்ப்பே பொதுவேட்பாளர் என்ற முயற்சியின் வெற்றியைத் தீர்மானிக்கின்றது. பொதுவேட்பாளர் வெற்றி பெறமாட்டார் என்பது எல்லோருக்குமே தெரியும். ஆனால் அந்த வெற்றிபெறாத வேட்பாளரை நிறுத்துவதால் எமது இனத்தை வெற்றி பெறவைக்க முடியும். எமது கோரிக்கைகளை வெற்றிபெற வைக்கமுடியும்.

எனவே கட்சிகள், அமைப்புகள் இடையே நீண்ட கலந்துரையாடல்கள், பேச்சுகள், ஒப்பந்தங்கள் என்பவற்றில் மட்டுமே காலத்தைக் கரைக்காது, தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற விடயத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும். அறிக்கைகள், ஊடக சந்திப்புகள் மூலம் அது நடந்துவிடப்போவதில்லை. நேரடியாக களத்தில் இறக்கி மக்களைச் சந்தித்துத் தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டாலே மக்களின் எண்ணப்போக்கில் மாற்றங்களை ஏற்படுத்தமுடியும். அவ்வாறு களத்தில் வேலை செய்யாவிட்டால், தமிழ்ப் பொதுவேட்பாளர் என்ற முயற்சி பிசுபிசுத்துப் போகவும் வாய்ப்புகள் அதிகம்.




# சம்பள முரண்பாடுகள் முன்மொழிவு சேகரிப்பு

### ஓகஸ்ட் 9 வரை காலஅவகாசம்

**கொழும்பு, ஜூலை 25**

**அரசசேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை நிவர்த்திசெய்ய நியமிக்கப்பட்ட நிபுணர் குழு, சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைத் திருத்துவதற்கான முன்மொழிவுகளைக் கோரியுள்ளது.**

இதற்கான விண்ணப்பப் படிவத்தை ஜனாதிபதி அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.presidentsoffice.gov.lk இலிருந்து பதிவிறக்கம் செய்யமுடியும்.

அனைத்து முன்மொழிவுகளையும் MS Wordஇல் Iskoola Pota எழுத்துருவில் 12 அளவில் அதன் மென் பிரதியை PDF வடிவில் ஒரு பக்கத்துக்கு மட்டுமே வரையறுத்து தயாரித்து saec@presidentsoffice.lk என்ற உத்தியோகபூர்வ முகவரிக்கு எதிர்வரும் 9ஆம் திகதிக்கு முன் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படவேண்டும்.

அனைத்துப் பரிந்துரைகள் தொடர்பாகவும் நிபுணர் குழுவால் ஆய்வுசெய்யப்பட்டு விண்ணப்பதாரரைப்பிரதிநிதித்துவப் படுத்தும் நிறுவனம் , தொழிற்சங்கம் , சிவில் அமைப்புடன் கலந்துரையாடுவதற்காக கால அவகாசம் வழங்கப்படும் என்றும் குழு அறிவித்துள்ளது. (ச-இ)

## ஏற்றுமதி ஏறுமுகம்

கொழும்பு, ஜூலை 25

2024ஆம் ஆண்டின் மே மாதத்துடன் ஒப்பிடுகையில் கடந்த ஜூன் மாதத்தில் ஏற்றுமதி வருமானம் அதிகரித்துள்ளதாக தரவுகள் தெரிவித்துள்ளன.

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தற்காலிக தரவுகளுக்கு அமைய, ஜூன் மாத ஏற்றுமதி வருமானம் 1.97 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. (ச-இ)

## பொலிஸார் இடமாற்றம்

கொழும்பு, ஜூலை 25

பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரிகள் 47 பேர் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இடமாற்றம் செய்யப்பட்டவர்களில் 22 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் அந்தப் பதவிகளிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர். (ச-இ)


## சுற்றுலாத்துறைக்கு வாகன இறக்குமதி

கொழும்பு, ஜூலை 25

முன்னணி10சுற்றுலாநிறுவனங்களுக்கு வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத் துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

110 வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு 25 நிறுவனங்களுக்கு இறக்குமதி அனுமதிப்பத்திரம் தயாராக உள்ளது.

அவை ஹைபிரிட் மின்சார வாகனங்களை மட்டுமே இறக்குமதி செய்யமுடியுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)



## கைத்தறி நெசவுக்கு 300 மில்லியன் ரூபா

கொழும்பு, ஜூலை 25

கைத்தறி நெசவுத்துறையை முன்னேற்றுவதற்கு 300 மில்லியன் ரூபா இந்த ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் அரசு ஒதுக்கியுள்ளது. இளைஞர்களையும் பெண்களையும் கைத்தறி நெசவுத்துறையில் ஊக்குவிக்கும் வகையில் இந்த நிதியொதுக்கப்பட்டுள்ளது. இந்த நிதியின் மூலம் கைத்தறி நெசவுத்துறையினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம் என அரசாங்கம் எதிர்பார்க்கிறது. (ச-6)

### நாளை

26.07.2024

வெள்ளிக்கிழமை - ஆடி - 10

சுபநேரம் : 06.02 - 07.32

ராகுகாலம் : 10.32 - 12.02

### நாளொரு நல்வார்த்தை

**ஒரு செயலுக்குக் கிடைக்கும் வெகுமதியானது மற்றொரு செயலை நிறைவேற்றத் தேவையான சக்தியாகின்றது.**

- ஜோர்ஜ் எலியட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமங்கள் இரத்து

கொழும்பு, ஜூலை 25
பல்வேறு முறைகேடுகள் காரணமாக 200 வெளிநாட்டு வேலைவாய்ப்புநிறுவனங்களின் உரிமங்கள் தடை செய்யப்பட்டுள்ளன.
மேலும் 400 நிறுவனங்களின் உரிமங்கள் இடைநிறுத்தப்பட்டு விசாரணைகள் நடைபெற்று வருவதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (ச-இ)

# ஓய்வூதியதாரர்களுக்கு விசேட கொடுப்பனவு:

*அமைச்சரவை அங்கீகாரம்!*

கொழும்பு, ஜூலை 25
ஓய்வூதியதாரர்களுக்காக விசேட மாதாந்தக் கொடுப்பனவாக 3 ஆயிரம் ரூபா வழங்குவதற்கு நேற்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் வேதன முரண்பாடுகள் நிவர்த்தி செய்யப்படும் வரை இந்த விசேட மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இந்தக் கொடுப்பனவு மூலம் 7 இலட்சம் ஓய்வூதியதாரர்கள் பயன் பெறுவார்கள் என்றும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-6-66)

# பேக்கரி உணவுகள்; விலை குறைகிறது

பேக்கரி உற்பத்திகளின் விலைகளை 10 ரூபாவால் குறைப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் எம்.கே.ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். கோதுமை மா இறக்குமதி செய்யும் இரண்டு நிறுவனங்களுடனும் பேச்சு நடத்தி தீர்மானம் எடுக்கப்படும்.
கோதுமை மா விலை குறைக்கப்பட்டால் பேக்கரி உற்பத்திகளின் விலைகள் குறைக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

பொலிஸ்மா அதிபர் இடைநிறுத்தப்பட்டாலும்

# தேர்தலை நடத்தும் அதிகாரம் தே.ஆணைக்குழுவுக்கு உண்டு

*நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் சுட்டிக்காட்டு*

பொலிஸ்மா அதிபர் பதவி இடைநிறுத்தப்பட்டாலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
பொலிஸ்மா அதிபரின் நியமனம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தால் இன்று (நேற்று) இடைக்காலத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவைத் தொடர்ந்து, அமைச்சரவை கலந்துரையாடியிருக்கின்றது. இதன்போது, நிரந்தர பொலிஸ்மா அதிபர் இல்லாத நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது சிரமமானதொன்று என்ற கருத்து நிலவுவதாக நாம் அறிகின்றோம்.
ஆனால், உண்மையில் சட்டத்தில் இதற்குத் தடைகள் இல்லை என்பதை நான் அழுத்தம் திருத்தமாகக் கூறுகின்றேன்.
எங்களுடைய அரசமைப்பிலே எப்பொழுது ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பது மிகமிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இதன்படி செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதிக்கும் ஒக்ரோபர் மாதம் 17ஆம் திகதிக்கும் இடையில் தேர்தலொன்று நடத்தப்பட்டேயாகவேண்டும். அதனை நடத்தும் அதிகாரம் தேர்தல் ஆணைக் குழுவின் கையிலேதான் கொடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் கையிலே அது கிடையாது. ஆகவே தேர்தல் ஆணைக்குழு சட்டத்தின் பிரகாரம் எந்தவித நொண்டிச்சாட்டுகளும் இல்லாமல் உடனடியாக தேர்தல் தினத்தினை அறிவித்து சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்தவேண்டும் - என்றார். (ம-125)

CHEC
COLOMBO HIGHER EDUCATION ON CONSULTANCY
உங்களது வெளிநாட்டு உயர்கல்விக்கு இன்றே அடித்தளமிடுங்கள்!
USA
EUROPE
CANADA
IRELAND
UNITED KINGDOM
எங்கள் சிறந்த ஆலோசகர் குழுவை,
Jetwing ஹோட்டல் யாழ்ப்பாணம்
27th of July | 10 am to 2 pm
ஸ்ரீ மதுரா ஹோல் வவுனியா
28th of July | 2 pm to 5 pm
ஆகிய இடங்களில் சந்திக்கலாம்.
உங்கள் உடனடி பதிவுகளுக்கு CV, Passport, IELTS மற்றும் ஏனைய கல்வி ஆவணங்களை கொண்டு வாருங்கள்.

ரூபா. 50,000 பெறுமதியான பதிவை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்
இன்றே பதிவுகளை மேற்கொள்ள மது : 0777 167 606
0117 549 600
0774 311 140

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 . 01 . 1942



மறைவு
23 . 07 . 2024

## திருமதி சிவசுப்பிரமணியம் ஜெகசோதி

காரைநகர் நாவற்கண்டியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசுப்பிரமணியம் ஜெகசோதி நேற்றுமுன்தினம் (23.07.2024) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கவேல் - லக்ஷ்மிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற வைத்திய கலாநிதி சி.சிவசுப்பிரமணியம் (காது மூக்கு தொண்டை அறுவைச்சிகிச்சை நிபுணர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பழனியார் சின்னத்தம்பி-தங்கம் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் தியாகலிங்கம், கெங்காதரன் காலஞ்சென்ற சத்தியதேவன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், திலகவதி காலஞ்சென்ற தவமணி மற்றும் தனலக்ஷ்மி, கமலாதேவி ஆகியோரின் மைத்துனியும் பாலகுமார், பவானி ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஞானசோதி, வைத்தியகலாநிதி S.கேதீஸ்வரன் ஆகியோரின் மாமியாரும் திருவேணி, வைஷ்ணவி, சர்வேஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற ஸ்ரீவிக்னேஸ்வரன்-சிவனேஸ்வரி தம்பதியினர், காலஞ்சென்ற முத்தையா மற்றும் பரமேஸ்வரி தம்பதியினர் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2024) வியாழக்கிழமை காலை 7.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.
இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

96, 1 ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்

தகவல்:
குடும்பத்தினர்.
021 222 2575, 077 629 0614

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு
ஆடைகளின் சாம்ராஜ்யம்
இந்தியன் செலக்ஷனின்
ஆடி மாத ஆடை தள்ளுபடி

திருமணப்பட்டுச் சாறிகள்
கொட்டன் சாறிகள்
சல்வார்கள்
சல்வார் துணிகள்
புத்தம் புது டொப் வகைகள்
மற்றும் சிறுவர் சிறுமிகளுக்கான ஆடைத் தெரிவுகள்...
இடம் : யாழ் வீரசிங்கம் மண்டபம்
12.07.2024 - 06.08.2024 வரை
ஞாயிற்றுக்கிழமைகளிலும் திறந்திருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,700 ரூபா இரத்து; அரசு அடிபணிந்ததா?

வேலுகுமார் கேள்வி



கொழும்பு, ஜூலை 25

பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு அரசு அடிபணிந்துவிட்டதா? பெருந்தோட்டத் தொழிலாளர்களின் விவகாரத்தில் அரசாங்கத்தின் உண்மை நிலைப்பாடு என்ன?

-இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் நாடாளுமன்றத்தில் நேற்றுப் புதன்கிழமை கேள்வியெழுப்பினார்.

பெருந்தோட்ட மக்களின் சம்பளத்தை 1700 ரூபாவாக அதிகரிப்பதாக ஜனாதிபதி அதிவிசேட வர்த்தமானி வெளியிட்டார். இந்தநிலையில் அந்த வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டுள்ளது

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள பெருந்தோட்ட மக்களின் சம்பள விவகாரம் தொடர்ந்து இழுபறி நிலையில் உள்ளது. அரசாங்கத்தின் நிலைப்பாட்டைக் குறிப்பிடுங்கள் என்று அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான பிரசன்ன ரணதுங்க, பெருந்தோட்ட மக்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளோம் - என்றார். (ச-இ)

**வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்.**

**மூளாய் சந்தை, மாட்டிறைச்சிக் கடையினை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2024**

குத்தகை காலப்பகுதி :- 2024.08.01 - 2024.12.31
கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 2024.07.25 - 2024.07.31 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 2024.07.31 பி.ப 2.00 மணி வரை
கேள்வித்திறக்கும் திகதி :- 2024.07.31 பி.ப 2.30 மணி

கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் என்ற முகவரிக்கும் இரண்டாவது பிரதியை **பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்** எனும் முகவரியிட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.
மேலதிக விபரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | சந்தை இறைச்சிக்கடை | மாதாந்த வாடகை சபைக்குச் செலுத்த வேண்டியது | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப்பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|---|
| 01 | சங்கரத்தை மாட்டிறைச்சிக்கடை | 1,750.00 | 175,000.00 | 5,000.00 | 1,000.00 |
| 02 | மூளாய் சந்தை | | 25000.00 | 1,000.00 | 1,000.00 |

**தலைமை அலுவலகம்,**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

**செயலாளர்**
**வலிகாமம் மேற்கு பிரதேச சபை,**
**சுழிபுரம்.**

(cr.42878) (N-1)

## INVITATION FOR BID 2024/04
## Regional Directorate of Health Service, Jaffna.

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received a grant from World Bank towards the cost of MSD & Line Ministry and intends to apply part of the proceeds of this grant to payments under the contracts listed below in the table.
2. The Chairman, Regional Procurement Committee, on behalf of the Regional Director of Health Services, Regional Directorate of Health Services, NP, Jaffna now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
3. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).
"Bidding will be conducted through National Competitive Bidding Since the Estimated Value of Work to be performed under this procurement (excluding VAT and other taxes) is below Rs. 50 Mn., regional preference and CIDA grade preference shall apply as stipulated in Public Finance Circular No. 04/2016 (iii).
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
5. Qualification' requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Schedule (Section 5) for SBD 3 documents.
6. Interested bidders may obtain further information from **address given below** in 7 and inspect the bidding documents at the same place on any working days from 09.00 hrs to 15.00 hrs.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Regional Directorate of Health Services, Health Village, Pannai (T.P:0212214966, Fax: 0212226253) from 9.00 a.m. to 15.00 p.m. during the period mentioned in the table upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment should be by cash.
8. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Regional Procurement Committee, Regional Directorate of Health Services, Health Village Pannai,** on or before 10.30 a.m at the date mentioned in the table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
9. Pre-Bid Conference will be held at Conference Hall, Regional Directorate of Health Services, Health Village Pannai, Jaffna on commencing at 2.30 P.M on the date mentioned in the table.
10. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table

| CATEGORY II | Document Issuing/Purchasing Period | | | From 25.07.2024 until 07.08.2024 | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Pre-Bid Conference | | | At 2.30 P.M on 01.08.2024 | | | |
| | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 08.08.2024 | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period | Grade Required | Non-Refundable Fees | Required Bid Security | |
| | | | | | | Security Amount | Validity Period |
| NP/04/41/2024/MSD/W/01 | Improvement of Drug Store Facilities at Base Hospital Chavakachcheri-Indoor And Drug Store | 2.54 | 84Days | C8 and C7 (Buildings) | 1,500.00 | 26,000.00 | Till 07.11.2024 |
| NP/04/41/2024/LM/W/01 | Renovation of Blood Bank AT Base Hospital, Tellippalai,Jaffna | 1.51 | 75Days | C9 and C8 (Buildings) | 1,500.00 | 15,500.00 | Till 24.10.2024 |

**Chairman**
**Regional Procurement Committee**
**Regional Directorate of Health Service, Jaffna.**

(cr.42798) (N-1)

# சுகாதார அமைச்சின் 27 அதிகாரிகள் இடமாற்றம் ஊழல்கள் மூடிமறைப்பா?

சுகாதார அமைச்சின் ஊழல் விசாரணைப் பிரிவின் 27 அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இந்த இடமாற்றங்கள், தகவல்களை மறைக்கும் முயற்சியாக இருக்குமோ என்று சந்தேகம் எழுகிறது.

-இவ்வாறு சுகாதார தொழில் வல்லுநர்கள் சங்க தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறையின் ஊழல் விசாரணைப் பிரிவிலுள்ள 30 பேரில் 27 பேர் இடமாற்றப்பட்டுள்ளனர்.

சுகாதார சேவையில் மட்டுமன்றி அரச துறையில் பல ஊழல் மோசடிகள் நடந்துள்ளன. இந்நிலையில் குறித்த இடமாற்றமானது ஊழல் விசாரணைப் பிரிவினால் தகவல்களை தேடிக் கொள்ள முடியாத நிலையை உருவாக்குவதற்காகவும் தகவல்களை அழிப்பதற்காகவும் இடம்பெற்றிருக்கலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# மன்னிப்புத் தேவையில்லை; இழப்பீடே வழங்கவேண்டும்

எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 25

கொரோனாவால் உயிரிழந்த முஸ்லிம்களின் சடலங்களை கட்டாய தகனத்துக்கு உட்படுத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் மன்னிப்புக் கேட்டு தப்பி ஓட முற்படக்கூடாது. இது விடயத்தில் பொறுப்புகூறல் அவசியம். பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.

-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா தொற்றுநோய் நிலவிய காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட கட்டாய தகன கொள்கைக்கு மன்னிப்பு கேட்பதென்பது ஒரு சிறந்த விடயம்.

முஸ்லிம்களை இலக்கு வைத்து அடக்கமா தகனமா என்ற விவகாரம் தொடர்பில் கோத்தாபய ராஜபக்சவின் அமைச்சரவை தவறான தீர்மானத்தை எடுத்திருந்தது. இந்த விடயங்கள் தொடர்பான காரணங்களை அரசு தெளிவுபடுத்தவேண்டும். பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். முஸ்லிம் மக்களிடம் மன்னிப்புக் கேட்டு பிரச்சினையில் இருந்து தப்பி ஓட முயற்சிக்க வேண்டாம் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 41 ஆண்டுகள் கழிந்தும் நீதி இன்னமும் மறுதலிப்பு

### கறுப்பு ஜூலை குறித்து கனடா பிரதமர் ஆதங்கம்

கொழும்பு, ஜூலை 25

கறுப்பு ஜூலை இலங்கையின் வரலாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக விளங்குகின்றது. ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்களைப் பலியெடுத்த இந்த வன்முறைக்கு இன்னமும் நீதி எட்டப்படவில்லை.

-இவ்வாறு கறுப்பு ஜூலையின் 41 ஆவது வருடத்தைக் குறிக்கும் விதத்தில் வெளியிட்டுள்ள அறிக்கையில் கனடா பிரதமர்ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.ஆயிரக்கணக்கான அப்பாவிகளின் உயிர்கள் இழக்கப்பட்டன, பல தமிழர்கள் பாலியல் வன்முறைகளுக்கு இலக்கானார்கள், நாட்டிலிருந்து தப்பியோட நிர்ப்பந்திக்கப்பட்டனர். இலங்கையின் வர லாற்றில் மிகவும் இருண்ட அத்தியாயமாக அது விளங்குகின்றது.

இலங்கையில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களுக்கு எதிரான மனித உரிமைமீறல்கள் மற்றும் துஷ்பிரயோகங்கள் குறித்து இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டியது அவசியமே என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-இ)

# ஆரம்ப சுகாதார சேவைக்கு 150 மில்லியன் டொலர்!

### சுகாதாரஅமைச்சர் தகவல்

கொழும்பு, ஜூலை 25

நாட்டின் ஆரம்பச் சுகாதாரசேவையில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக 150 மில்லியன் டொலர் நிதி அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

மத்திய அரசாங்கத்தின் கீழ் வரும் மருத்துவமனைகள், மாகாணசபை மட்டத்திலான மருத்துவமனைகள் என்ற எந்தவித பேதங்களும் இன்றி அரசாங்கம் போதிய நிதியை ஒதுக்கி அவற்றுக்கான தேவைகளைப் பெற்றுக்கொடுக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

## இந்திய மீனவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

நெடுந்தீவுக் கடற்பரப்பில் கடந்த மாதம் 23ஆம் திகதி கைது செய்யப்பட்ட 22 இந்திய மீனவர்களினதும் விளக்கமறியல் மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 30ஆம் திகதிவரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ம-66)

## REGIONAL DIRECTORATE OF HEALTH SERVICES, JAFFNA
## INVITATION FOR BIDS

### Procurement of supply & Installation of Air conditioner 18000 BTU

A. The Regional Procurement Committee invites sealed bids from eligible and qualified bidders for the Supplies, Works as specified following Tables.

**01) Air conditioner 18000 BTU (08 nos)**

Bidding will be conducted through National Competitive Bidding Procedure

B. To be eligible for contract award the successful bidder shall not have been blacklist and shall need the following requirements

01) Bidders shall have valid business registration

02) Bidders shall have Manufacturer Authorization for their goods.

C. Interested eligible bidders may obtain further information from the Regional Director of Health Services, Jaffna Contact No (021 2222278/2214966 ext 20), during the office hours and inspect the Bidding Documents at the same address any working days for 9.00am to 3.00pm except 12.30 to 13.30 hours

D. A complete set of English Bid documents may be purchased by interested bidders on the submission of "Application for Bid Documents" available in this office and upon payment of a **non-refundable fee** as specified in the table by cash on working days from **25.07.2024 to 06.08.2024** during **09.00** Hours to 15.00 Hours.

E. Bids must be delivered on or before **10.00 AM of 07.08.2024**. The address given below in the tender box available at the Room. Bids will be opened immediately after the closing of the bids in the presence of the bidders or their representatives.

F. Bid shall be valid for a remind **90** days from the last date fixed for receiving of Bids or any extended period and Bid Security valid for 118days from the bid opening

G. Pre bid meeting Will be on **31.07.2024** at 10.00 am at RDHS Office Health Village Pannai

H. Regional Procurement committee will be the **right** to make final decision in regard the accept or reject Bids

**Table -1**

| Reference No | Item | Qty | Non refundable fees | Bid Security | Bid Security Validity period |
|---|---|---|---|---|---|
| NP/RDHS/LM/2024/EE/02 | Supply & Installation of Air conditioner 18000BTU | 08 | 1,500.00 | 176,000.00 | Till 02.12.2024 |

**Chairman -Regional Procurement committee**
**RDHS Office, Jaffna.**

(cr.42876) (N-1)

# பாராட்டி வாழ்த்துகிறோம்
## திரு. தேவராசா வைகுந்தன்
**(தென்னைப் பயிர்ச் செய்கை சபை உதவிப் பொது முகாமையாளர்)**




அறிவால் அறியும்
தெளிவால் தெளியும்
நிர்வாகத்திற்கே
இலக்கணமாய்
நெறியாள்கையோடு
அன்போடு மக்களின்
தேவை அறிந்து
சேவை பல செய்து
புகழ் கூடி இங்கே
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
வெற்றி வாகை சூடி
நிற்கிறது வைகுந்தன் ஐயாவே.
தென்னைச் சபையின்
இலங்கைத் தேசத்திற்கு
ஒரு தலைமகனாய் வந்து
உதவிப் பொது முகாமையாளராக
பதவி உயர்வு
பெற்ற திறமைத்தமிழ்மகன்
வாழ்க! உங்கள்
புகழ் ஓங்கி நிற்க
வாழ்த்துகிறோம்.

***பாராட்டி வாழ்த்துவோர்***
**கல்மடுநகர் கற்பகதரு சங்கம்**
**பெரியகுளம் கற்பகதரு சங்கம்**
**தென்னைப்பயிர்ச் செய்கை சபை**
**கண்டாவளை.**

# பாராட்டி வாழ்த்துகிறோம்
## திரு. தேவராசா வைகுந்தன்
**(தென்னைப் பயிர்ச் செய்கை சபை உதவிப் பொது முகாமையாளர்)**




தார்மீக பண்பும்
நிர்வாக திறமையும்
மக்களின் பண்பையும்
அறிந்து அதன்படி
நெறிப்படுத்தும்
தனித்துவமான மாமனிதன்
நம் தென்னைப் பயிர்ச்செய்கை
சபையின் பிராந்திய முகாமை
யாளர் வைகுந்தன் ஐயா.
சேவை எனும் சொல்லை
செயலில் செயற்படுத்தி
வெற்றி கண்டு
வெற்றி வாகை சூடி
நிக்கின்ற இலங்கையின்
உதவிப் பொதுமுகாமையாளரான
வைகுந்தன் ஐயாவே
கோடி புகழ் உமக்கு
வாரி வழங்குகிறோம்
மேலும் பல பதவியுடன்
நல் வாழ்வு வாழ்ந்து
பல்லாண்டு காலம் வாழ்கவென
வாழ்த்தி அமைகின்றோம்.

***பாராட்டி வாழ்த்துவோர்***
**தருமபுரம் மேற்கு கற்பகதரு சங்கம்**
**தருமபுரம் கிழக்கு கற்பகதரு சங்கம்**
**தென்னைப்பயிர்ச் செய்கை சபை**
**கண்டாவளை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



தோற்றம்
02 . 06 . 1941

மறைவு
22 . 07 . 2024

### ஞானம் நவநீதகிருஷ்ணன்

காரைநகரை பிறப்பிடமாகவும் சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானம் நவநீதகிருஷ்ணன் (22.07.2024) திங்கட்கிழமை அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தோமா-மேரி ஆகியோரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-சீதேவி ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவநீதகிருஷ்ணனின் அன்பு மனைவியும், Dr.சுதன், பீற்றர் ஞானரஞ்சன் (பொறியியலாளர், அமெரிக்கா), அருட்பணி.யோன் ஞானகாருண்யன் (தூய இம்மானுவேல் ஆலயம், உரும்பிராய்), ஏஞ்சலின் நவந்தினி, மேசி நவதர்சினி (கனடா) ஆகியோரின் அன்பு தாயாரும் கலாவதி (தேசிய சேமிப்பு வங்கி திருநெல்வேலி), சுகிர்தா (பொறியியலாளர் அமெரிக்கா), தேவகி (சிரேஷ்ட விரிவுரையாளர் FAHS யாழ் பல்கலைக்கழகம்), அன்டனி ஞானசேகரன் (World Vision) ஆகியோரின் அன்பு மாமியும் போல் பிரகாஷ் (St.Johns College), சலேமி (அமெரிக்கா), சுகாயன் (அமெரிக்கா), அபிகெயில் கீர்த்தனா (சுண்டிக்குளி மகளீர் கல்லூரி), ஆகாய் கீர்த்தனன் (St. Johns College), அபிஷேக் பீற்றர் (கனடா), நத்தானியல் பீற்றர் (கனடா), ஹனா அன்பினி (கனடா) ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கவழிபாடு நாளை (26.07.2024) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புறாடி வீதியிள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பரி.யாக்கோபு அலய சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**28 புறாடி வீதி,**
**சுண்டிக்குளி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 900 3585**

(CS 999) V-1

## மரண அறிவித்தல்



மலர்வு
08 . 09 . 1936

உதிர்வு
23 . 07 . 2024

### அமரர் சுப்பையா நவராஜா

**(இளைப்பாறிய பிரதம எழுதுவினைஞர் பொலிஸ்திணைக்களம் முன்னாள் ஊழியர் தினக்குரல் பத்திரிகை நிறுவனம்)**

மாவிட்டபுரத்தினை பிறப்பிடமாகவும் மல்லாகம் நீலியம்பனை வசிப்பிடமாகவும் தற்போது இந்தியா (பெங்களுர்) வதிவிடமாகவும் கொண்ட திரு சுப்பையா நவராஜா 23.07.2024 செவ்வாய்க்கிழமை இந்தியாவில் காலமானார்.

அன்னார் சந்தானலெச்சுமி (குண்டுமணி) அவர்களின் அன்புக் கணவரும், அகிலா (இந்தியா), சிவகரன் (கனடா), அகிலன் (இந்தியா) ஆகியோரின் அன்புத்தந்தையும் மணி (இந்தியா), ஜானகி (கனடா), தர்சினி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் லோகேஸ்வரி இரத்தினராஜா (கனடா), தவராஜா (மானிப்பாய்) ஞானேஸ்வரி (அமெரிக்கா) காலஞ்சென்ற சிவராஜா ஆகியோரின் அன்பு சகோதரரும் காலஞ்சென்ற சிந்தாமணி சொக்கநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2024) வியாழக்கிழமை பெங்களுரில் (இந்தியா) நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**A.யாழினி,**
**நீலியம்பனை, மல்லாகம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**அகிலன் (மகன்)**
**+919 66 339 2205**

(CR 42879) V-1

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை,**
**உப அலுவலகம் கோப்பாய்.**

## ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்

யாழ். வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் கோப்பாய் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் - 14, டச்சு வீதி . 149,149/1 என்னும் வரி மதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம், 149 தம்பாப்பிள்ளை யோகநாதர், 149/1 S.நடராசா எனவும் ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதனத்தினை ஜி.பி.எஸ் ஒழுங்கை . 3 ம் கட்டை, கல்வியங்காடு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சீவரத்தினம் அருணகிரிநாதன் (தே.அ.அ.இல. 550670828 V) என்பவர் நொத்தாரிசு K.சண்முகரத்தினத்தினால் வரையப்பட்ட 2022.09.24 ஆம் திகதிய 919 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் சந்திரதோட்டம் ஜி.பி.எஸ் ஒழுங்கை, கலியங்காடு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சரவணதாஸ் கோபிகிருஷ்ணன் (தே.அ.அ.இல - 842511631V) என்பவருக்கு நன்கொடையாக ஒப்படைத்துள்ளார்.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட தாய் உறுதியான நொத்தாரிசு K.சண்முகரத்தினம் முகதாவில் 2022.09.02 ஆம் திகதிய 916 ஆம் இலக்க பிரகடன உறுதியில் சீவரத்தினம் அருணகிரிநாதன் (தே.அ.அ.இல-550670828 V) என்பவர் குறித்த ஆதனமானது தனது தாய் மாமன் தம்பாப்பிள்ளை யோகாநந்தர் என்பவருக்கு சொந்தமாய் இருந்ததென்றும் 1958 ஆம் ஆண்டு ஐப்பசி மாதமளவில் தனது தாயார் சீவரத்தினம் பெண் மகேஸ்வரியின் சீவிய உரித்துக்கு அமைவாக தனது பெயரில் நன்கொடை உறுதி எழுதிக் கொடுத்திருந்தார் என்றும் அப்போது தான் பராயமடையாத சிறுவனாக இருந்ததனால் குறித்த நன்கொடையை தன் சார்பில் தனது தாயார் ஒப்பமிட்டு ஏற்றுக்கொண்டிருந்தார். என்றும் அன்று தொடக்கம் குறித்த ஆதனத்தின் உடைமை தாயாரிடத்திலே இருந்து வந்ததென்றும். தானும் தாயாருடனேயே வசித்து வந்ததாகவும் குறிப்பிட்டு தனது தாயார் 1997 ஆண்டு காலஞ்சென்ற பின்னும் குறித்த ஆதனத்தின் உடைமையில் தானே தொடர்ந்து இருந்து வந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் குறித்த உறுதி தனது தாயாரின் பாதுகாப்பில் இருந்து வந்ததென்றும் அவர் காலஞ்சென்ற பின்னர் குறித்த உறுதியை தேடியும் கிடைக்காததால் காணிக்கந்தோரில் தேடுதல் செய்ய முடியவில்லை. எனினும் தனது தாயாரின் உடைமை உட்பட 64 வருடங்களுக்கு மேலாக எவரதும் தலையீடற்றதும் தொடர்ச்சி முறிவற்றதுமான ஆட்சியில் இருந்து வருகின்றேன் என்றும் தானே இவ்வாதனத்தின் தனித்தும் ஒருமித்தும் முழுமையான சொந்தக்காரரும் உரித்தாளியுமாவேன் என்பதுடன் அன்று முதல் இவ்வாதனத்திற்கு தேவையான அபிவிருத்திகளையும் அதன் மூலம் வருமானங்களையும் பெற்று வந்தேன் என வெளிப்படுத்தல் செய்துள்ளார்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பிரிவு கோப்பாய் தெற்கு இறை. கல்வியங்காடு கிராமசேவையாளர் பிரிவு J/259 வலிகாமம் கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைக்குட்பட்ட "சந்திரதோட்டம்" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களால் 2022.07.13 ஆம் திகதி வரையப்பட்ட 5431 ஆம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது. இதன் விலாசம் நிலப்பரப்பு ஐந்து குளி சைபர் எட்டு தசம் சைபர் சைபர் (நி.பர 5 குளி 08.00) (ஹெக்டெயர் 0.1400) வான் பயிர் செய்பயிர் வீடும் . இதற்கு எல்லைகள் :

கிழக்கு : முத்துக்குமாரு விநாயகசேகரத்திற்குரிய ஆதனம்
வடக்கு : யோகேஸ்வரன் பெண் தினமணிதேவியின் ஆதனம்
மேற்கு : டச்சு வீதி
தெற்கு: சொர்ணலிங்கம் பெண் இந்துமதியின் ஆதனம்

தற்போது இவ்வாதனத்தை சரவணதாஸ் கோபிகிருஷ்ணன் என்பவர் தமது பெயரிற்கு எமது ஆதனப்பதிவேட்டில் ஆதனப் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தருமாறும் யாரேனும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது "சரவணதாஸ் கோபிகிருஷ்ணன்" என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ் ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**செயலாளர்,**
வலி கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.

## பெருகும் டெங்கு

கொழும்பு, ஜூலை 25
அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் டெங்கு நுளம்புகளின் பரவல் வேகமாக அதிகரித்துள்ளதாக பூச்சியியல் ஆய்வு அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.
கடுமையான அபாயங்கள் உள்ளதாக இனங்காணப்பட்ட பகுதிகளில் விசேட நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளன என் றும் பூச்சியியல் ஆய்வு அதிகாரிகள் சங்கத் தலைவர் நஜித் சுமனசேன மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## சீருடைத் துணி சீனா சம்மதம்

கொழும்பு, ஜூலை 25
2025 ஆம் ஆண்டு பாடசாலை மாணவர்களுக்குரிய சீருடை துணிகளை வழங்குவதற்கு சீனா சம்மதித்துள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.
இதன்மூலம் 6 பில்லியன் ரூபாவை மீதப்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.
2024ஆம் ஆண்டும் சீனாவே பாடசாலை மாணவர்களின் சீருடைத் துணிகளை அன்பளிப்புச் செய்திருந்தது.
(ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரை மாற்றுமாறு கோரி வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, ஜூலை 25

**வவுனியா இராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலய அதிபரை மாற்றுமாறு கோரி பெற்றோர் நேற்றுப் புதன்கிழமை பாடசாலை முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.**



ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர் தெரிவிக்கையில்,

எமது பாடசாலை கல்வியில் வீழ்ச்சிநிலையினைக் கண்டுள்ளது. பாடசாலையில் இடம்பெறும் வேலைத்திட்டங்கள் தொடர்பான கணக்கறிக்கைகள் எவையும் சமர்ப்பிக்கப்படவில்லை.

அங்கு இடம்பெறும் சம்பவங்கள் தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடல் இடம்பெறுவதில்லை. பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு செல்கின்றது. இந்த நிலைமை தொடர்ந்தால் பாடசாலையினை இழுத்து மூடவேண்டிய நிலைமையே ஏற்படும்.

எனவே, உடனடியாக அதிபரை இடமாற்றி கல்வி வளர்ச்சிக்கு நடடிக்கை எடுக்கவேண்டும் - என்றனர். (ச-110)

## நீதிமன்ற வழக்குக்கு போதையில் வந்தவர் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜூலை 25

வழக்கு விசாரணை ஒன்றுக்கு மதுபோதையில் வந்த நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

யாழ். நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வரும் குடும்ப வன்முறை தொடர்பான வழக்கு விசாரணையின்போது குறித்த நபர் மதுபோதையில் வந்துள்ளார்.

அதன்போது அவரை பொலிஸார் கைதுசெய்து மன்றில் முற்படுத்தியதையடுத்து அவரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியல் வைக்க யாழ்ப்பாண நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-20)

## கிளிநொச்சியில் சீன நன்கொடை

கிளிநொச்சி, ஜூலை 25

சீன அரசாங்கத்திடமிருந்து கடற்றொழிலாளர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்ட அரிசி வழங்கும் செயற்றிட்டம் நேற்றுப் புதன்கிழமை கிளிநொச்சியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறித்த அரிசி அடங்கிய இரண்டு கொள்கலன்கள் இந்த மாதம் கனரக வாகனங்களில் கிளிநொச்சி மாவட்டத்தை வந்தடைந்த நிலையில் கடற்றொழில் திணைக்களம் ஊடாக 2981 கடற்றொழிலாளர் குடும்பங்களுக்குத் தலா இருபது கிலோ கிராம் அரிசி வீதம் வழங்கப்படவுள்ளது. (ச-66-113)

## மருத்துவமனைக்கு உணவகம் இல்லை

### அக்கராயன் மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜூலை 25

அக்கராயன் பிரதேச மருத்துவமனையில் உணவகம் இன்மையால் 800 மீற்றர் தூரம் சென்று நோயாளர்கள் உணவைப் பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குருதிப் பரிசோதனைக்காக வரும் நோயாளர்கள் உணவு, தேநீர் அருந்தாமல் வரவேண்டும். ஆனால், குருதியை வழங்கியவுடன் உணவு உட்கொள்ள உணவக வசதி இல்லை. நிதி கிடைத்தவுடன் உணவகம் அமைக்கப்படும் என அதிகாரிகளால் பதில் வழங்கப்படுகிறது. எனினும் 15 ஆண்டுகளாக உணவகம் அமைக்கப்படவில்லை. இதனால் இந்த மருத்துவமனையை நம்பியுள்ள 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப-13)

## மாணவர்களால் நன்கொடை வாரம்

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ். இந்துக் கல்லூரியின் மாணவ முதல்வர் சபை கடந்த திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை வரையான காலப் பகுதியை நன்கொடை வாரமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

இந்தக் காலப் பகுதியில் தினமும் காலை 7 மணி முதல் காலை 8 மணி வரை மாணவர்களின் பயன்பாட்டுக்கு உகந்த பாவிக்கமுடியுமான நிலையில் உள்ள பொருள்களை மாணவ முதல்வர் சபையில் கையளிக்கலாம்.

நீங்கள் வழங்கும் பொருள்களைச் சீரமைத்து இடர் பிரதேச பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது என்றும் மாணவ முதல்வர் சபையினர் குறிப்பிட்டுள்ளனர். (ச-25-66)


## மணலகழ்வு முறியடிப்பு

### 4 பேர் கைது

கிளிநொச்சி, ஜூலை 25

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோரமோட்டை ஆற்றில் சட்டவிரோதமாக மணலகழ்வில் ஈடுபட்ட 4 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டனர். மணலகழ்வுக்கு பயன்படுத்திய 3 உழவு இயந்திரங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

கிளிநொச்சி பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் மணலகழ்வு முறியடிக்கப்பட்டது. சந்தேகநபர்கள் இராமநாதபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ப-27-113)




## நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியரிடையே மோதல்

### ஒருவர் படுகாயம்

மன்னார், ஜூலை 25

திருக்கேதீஸ்வரத்தில் அமைந்துள்ள மாகாண நீர்ப்பாசன திணைக்களத்தில் பணிபுரியும் ஊழியர்கள் இருவரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடு கைகலப்பாகமாறியமையால் ஒருவர் காயமடைந்த நிலையில் மன்னார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நடந்துள்ளது. தாக்குதலுக்கு இலக்கானவருக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன் சந்தேகநபரை கைதுசெய்வதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-60)



## கசிப்புடன் கைதான பெண்ணுக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஊர்காவற்றுறை நாரந்தனை பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் ஆயிரத்து 500 லீற்றர் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலினையடுத்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை குறித்த பெண்ணின் வீடு சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே கசிப்பு மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட பெண்ணை ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியபோது அவரை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது. (ச-22-23)

## மாவிட்டபுரம் கந்தனின் திருக்கைலாச திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 25

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயக் காம்யோற்சவப் பெருவிழாவின் திருக்கைலாச வாகனத் திருவிழா இன்று வியாழக்கிழமை இரவு சிறப்பாக இடம்பெறவுள்ளதாக மாவை ஆதீனகர்த்தா மகாராஜஸ்ரீ து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள் தெரிவித்துள்ளார். மாலை4 மணியளவில் 108 சங்காபிஷேகத்துடன் திருக்கைலாச வாகனத் திருவிழா ஆரம்பமாகவுள்ளது. (ச-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறுசீரமைப்புகளைதொடர்ந்துபேணுக

## இலங்கைக்கு உலகவங்கி சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுலை 25

நாணயநிதியத்துடனான இணக்கப்பாட்டை அடுத்து இலங்கையின் பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவிலான முன்னேற்றங்கள் தென்பட ஆரம்பித்துள்ளன. அதனைத் தொடர்ந்து பேணுவதற்கும், மேம்படுத்துவதற்கும் தற்போதைய மறுசீரமைப்புகளைத்தொடர்வது அவசியமாகும் - இவ்வாறு உலக வங்கியின்சிரேஷ்ட பொருளியலாளர்கிரேகரி ஸ்மித் வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சில அரசியல் கட்சிகள் எதிர்வரும் தேர்தலின் பின்னர் தாம் ஆட்சியமைக்கும் பட்சத்தில் சர்வதேச நாணயநிதியத்துடனான மீள்பேச்சு மூலம் ஏற்கனவே விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மாற்றியமைக்கப்போவதாகக் கூறுகின்றன.

இலங்கை கடந்தகால நெருக்கடியிலிருந்து தற்போது படிப்படியாக மீட்சியடைய ஆரம்பித்துள்ளது. ஆட்சிப்பீடம் ஏறும் அரசாங்கம் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முற்படுகையில் நாடு மீண்டும் பின்னோக்கிச் செல்லக்கூடும். எனவே நாணயநிதியத்துடனானதற்போதைய மறுசீரமைப்புகளைத் தொடர்வது அவசியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

### தேசபந்து...

பொலிஸ்மா அதிபராகத் தேசபந்து தென்னக்கோனை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்த தீர்மானத்தை வலுவற்றதாக்கி உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுக்கள் நேற்றையதினம் உயர்நீதிமன்ற நீதியரசர்களான யசந்த கோதாகொட, மஹிந்த சமயவர்த்தன மற்றும் அச்சல வெங்கப்புலி ஆகியோரைக் கொண்ட நீதியரசர் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டமைக்கு எதிராக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்ட 8 தரப்பினரால் 9 அடிப்படை உரிமை மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

பொலிஸ்மா அதிபராக நியமனம் செய்வதற்கு ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்பட்ட தேசபந்து தென்னக்கோனின் நியமனம் அரசமைப்புப் பேரவையால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படவில்லை என மனுதாரர்கள் தமது மனுக்களில் சுட்டிக்காட்டியுள்ளனர். அவரை அந்தப் பொறுப்பில் அமர்த்த ஜனாதிபதி எடுத்த தீர்மானம் சட்டத்துக்கு முரணானது என மனுதாரர்கள் வலியுறுத்தியுள்ளனர். இதன் காரணமாக குறித்த நியமனத்தை செல்லுபடியற்றதாக்கி உத்தரவிடுமாறு குறித்த மனுக்களின் ஊடாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்த மனுக்களில் சபாநாயகர் உள்ளிட்ட அரசமைப்புப் பேரவையின் அங்கத்தவர்கள், தேசபந்து தென்னக்கோன், சட்டமா அதிபர் உள்ளிட்டவர்கள் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

வாதப்பிரதிவாதங்களைக் கேட்டறிந்த நீதிமன்றம் பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் செயற்படுவதற்கு இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்தது. (அ-ம-66-44)

### வழக்குக்காக...

ஒருவரை வாளால் வெட்டுவதற்குத் துரத்திச் சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மே மாதம் 30ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கொன்றுக்கு வந்துவிட்டுத் திரும்பிய ஒருவரை வாளால் வெட்டுவதற்கு மூவர் துரத்திச் சென்றுள்ளனர். இதனால் அச்சமடைந்தவர் மீண்டும் நீதிமன்ற வளாகத்துக்குள் புகுந்து தஞ்சம் கோரியுள்ளார். குறித்த சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதிவானின் கட்டளைக்கமைய சந்தேக நபர்களைக் கைதுசெய்ய உத்தரவிடப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களில் ஒருவரான 24 வயதுடைய நபர், இராசாவின் தோட்ட வீதியில் உள்ள வீடொன்றில் பதுங்கியிருப்பதாக யாழ்ப்பாண பிராந்திய பொலிஸ் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. கைதானவருக்கு எதிராக வாள்வெட்டுத் தாக்குதல்கள் தொடர்பில் நான்கு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

### காவலிருந்தவர்....

னைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர், கமக்கார அமைப்பின் செயலாளராக உள்ளார். ஆதலால் இந்தத் தாக்குதலின் பின்னர் மணல் கொள்ளை மாபியாக்கள் தொடர்புபட்டிருக்கலாம் என்று கமக்கார அமைப்பினர் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மல்லாவிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ-ம-15-316)

### பொதுத்...

வாய்ப்பில்லை என்று அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்பின் பிரகாரம் நடத்தப்படவேண்டிய தேர்தல்கள் அனைத்தும் முறைப்படி நடத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் பல்வேறு சந்தர்ப்பங்களில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றார். ஜனாதிபதித் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக வரவு - செலவுத் திட்டத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே காலம் தாழ்த்தப்படாமல் தேர்தல் நடத்தப்படும்.

ஆனால், இரண்டு தேர்தல்களை நடத்துவதற்கு தற்போது நிதியில்லை. பொதுத் தேர்தலுக்கு இவ்வாண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்படவில்லை. எனவே நாடாளுமன்றம் கலைக்கப்படும் எனவும் இவ்வாண்டுக்குள் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்றும் கூறுபவர்கள் கனவுலகத்தில் வாழ்பவர்கள். நாடாளுமன்றத்துக்கு இன்னும் பதவிக் காலம் உள்ளது - என்றார். (அ-ம)

### சா/த பெறுபேறு...

மாதம் வெளியாகும் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சையின் செய்முறைப் பரீட்சைகள் கடந்த வாரம் நடைபெற்றன. அத்துடன் விடைத்தாள் திருத்தும் பணிகளும் முடிவடைந்துள்ளன. ஆதலால், செப்ரெம்பர் மாதம் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம)

### செம்மலைப்...

சிறப்பாகவும் உணர்வு பூர்வமாகவும் இடம்பெற்றது.

பழையசெம்மலை நீராவியடிப் பிள்ளையார் ஆலய பொங்கல் உற்சவம் தொடர்பான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டபோது, நேற்றுமுன்தினமும் நேற்றும் இராணுவத்தினரும் பொலிஸாரும் அந்தப் பகுதியில் கண்காணிப்பைத் தீவிரப்படுத்தியிருந்தனர். இவ்வாறானதொரு பின்னணியிலேயே இந்தப் பொங்கல் உற்சவம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-19-66)

### அமைச்சரவை...

ஈடுபட்டார். தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபர் பதவியில் கடமையாற்றுவதற்கு செயற்படுவதற்கும் உயர் நீதிமன்றம் நேற்றுத் தடையுத்தரவு பிறப்பித்ததுடன், பொலிஸ்மா அதிபர் பதவிக்குப் பொருத்தமான ஒருவரை நியமிக்குமாறும் அறிவுறுத்தியிருந்தது. இதையடுத்தே அமைச்சரவைக் கூட்டத்தை ஜனாதிபதி ரணில் கூட்டினார்.

அமைச்சரவைக் கூட்டத்தின்போது, உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புத் தொடர்பான சட்ட அம்சங்களை ஆழமாக ஆராய்ந்து, அடுத்த இரண்டு நாள்களுக்குள் தமது பதிலை அறிவிப்பதென அரசாங்கம் முடிவு செய்துள்ளது. சட்டச்சிக்கல்கள் இல்லாமல் அல்லது நீதிமன்றத்தில் சவாலுக்கு உட்படுத்த முடியாத வகையில் தேசபந்து தென்னக்கோனை பொலிஸ்மா அதிபராக நியமிப்பது தொடர்பில் அரசாங்கம் அடுத்தகட்ட பேச்சுகளை முன்னெடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம)

### ஜனாதிபதித்...

அவர்களால் இறுதி செய்யப்படும் என்றும் தேர்தல் தொடர்பான அறிவிப்புகள் இன்று வெளியிடப்படலாம் எனவும் கருதப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பு நாளை வெள்ளிக்கிழமைக்குள் வெளியிடப்பட வாய்ப்புகள் உள்ளதாக கொழும்பு அரசியல் அரங்கில் பரபரப்பாகப் பேசப்படும் நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் இன்றைய கலந்துரையாடல் பெரும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-44)

### தமிழர்களின்...

ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கையில் இதற்கு முன்னரும் ஜனாதிபதித் தேர்தல்களின்போது தமிழ்ப் பொதுவேட்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். ஆனால், அவர்களால் குறிப்பிட்டுக்கூறும் அளவுக்கு வாக்குகளைப் பெறமுடியாமல்போனது.

சஜித் அனைத்து இன மக்களாலும் ஏற்கப்படும் தலைவர். எனவே, வடக்கு - கிழக்கு மக்கள் கடந்தமுறைபோல இம்முறையும் அவருக்குப் பேராதரவு வழங்குவார்கள் என்பது உறுதி. தமிழ்க் கட்சிகளிடம் ஆதரவு பெறுவது தொடர்பில் எமது தலைவரே நேரடி பேச்சில் இறங்கியுள்ளார். தற்போதும் அந்த பேச்சுகள் தொடர்கின்றன" - என்றார். (அ-ம-44)

### பொலிஸார்...

இளவாலையைச் சேர்ந்த மேற்படி நபர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரிடமே தன்னைப் பொலிஸார் என்று அடையாளப்படுத்தியதுடன், 3 இலட்சம் ரூபாவை மோசடியாகப் பெற்றுள்ளார். இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் அந்த நபரைக் கைது செய்துள்ளனர். அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் மேலதிக விசாரணைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றது. (அ-ம-26)

### யாருக்கு...

அறிவிக்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகின்ற பிரதான வேட்பாளர்களுடன் பேரம் பேசி, அவர்களுடைய தேர்தல் அறிக்கையிலே அவர்கள் சொல்லுகின்ற விடயங்களை அவதானித்து யாருக்கு எங்களுடைய மக்கள் வாக்களிக்க வேண்டும் என்ற செய்தியை நாங்கள் பின்னர் அறிவிப்போம்.

அதன்படி பிரதான வேட்பாளர்களாக தங்களை அடையாளம் காட்டியிருக்கின்ற சஜித் மற்றும் அநுரவுடன் உத்தியோகபூர்வமாக நாங்கள் பேச்சுகளை நடத்தியிருக்கின்றோம். எங்களுடைய எதிர்பார்ப்புகளை நாங்கள் சொல்லியிருக்கின்றோம். வேறு எவரும் இன்னமும் வேட்பாளர்களாக அறிவிக்கப்படவில்லை. அவ்வாறு அறிவிக்கப்படும் பட்சத்தில் அவர்களுடனும் நாம் பேச்சுகளை நடத்தவேண்டும் - என்றார். (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணலகழ்வு மூவர் கைது



கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கெற்பேலிப் பகுதியில் நேற்றுப் புதன்கிழமை காலை சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட 4 டிப்பர் வாகனங்கள் கொடிகாமப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டதுடன் 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ள னர்.

விடத்தற்பளை, கெற்பேலிப் பகுதியில் சட்டவிரோத மணலகழ்வு இடம்பெறுவதாக பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விரைந்து செயற்பட்ட பொலிஸார் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். (ப-20,27,66)

**விற்பனைக்குண்டு**

கொள்வனவு செய்து 2 மாதங்களேயான 142 L de-freeser உடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**076 294 3552**

**வேலையாட்கள் தேவை**

யாழ். கோப்பாய் இருபாலைச் சந்தியில் இயங்கும் Cafe ஒன்றிற்கு
ஆண், பெண் பணியாளர்கள் தேவை.
வயது எல்லை 18 - 30. கோப்பாய், இருபாலை பகுதிகளை அண்மித்தவர்கள் விரும்பத்தக்கது.

கருடா Cafe
பருத்தித்துறை வீதி, இருபாலைச் சந்தி **077 050 0008**

# துப்பாக்கி மீட்பு



கல்முனை, ஜூலை 25

கடற்கரையில் பிளாஸ்ரிக் குழாய் ஒன்றில் கிறீஸ்க்குள் புதைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியொன்று மீட்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. குறித்த துப்பாக்கி 2 தோட்டாக்களுடன் (ரிவோல்வர்) இயங்கு நிலையில் காணப்படுகின்றது என்றும், மேலதிக விசாரணைகள்முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம)

**வேலையாட்கள் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு பின்வரும் பணிநிலைக்கு பொருத்தமானோர் உடன் விண்ணப்பிக்கவும்.

- வீட்டுத் தோட்டப் பராமரிப்பாளர்
- மின் ஒட்டுநர் (Welder)
- A/C திருத்துநர்

தங்கி நின்று வேலைசெய்பவர்களுக்கு முன்னுரிமை

தொடர்புக்கு:
**071 120 9998**

**கேள்வி அறிவித்தல்**

செட்டிகுளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான தட்டான்குளம் கிளை நிலையம் வாடகைக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. வாடகைக்கு எடுக்க விரும்புபவர்கள் கேள்விப் பத்திரங்களை எதிர்வரும் 31.07.2024 இற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் செட்டிகுளம் ப.நோ.கூ. சங்கம், பிரதான வீதி செட்டிகுளம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

(குறிப்பு: ஆகக்குறைந்த முற்பணம் ரூபா 300,000 மற்றும் ஆகக் குறைந்த வாடகைப்பணம் ரூபா 25,000)

பொதுமுகாமையாளர்
செட்டிகுளம் ப.நோ.கூ. சங்கம்

(CS 28430) V-1

**Shop Assistant / worker**

தென் மாகாணத்தில் உள்ள பலசரக்கு கடை ஒன்றில் பணிபுரிவதற்கு ஆண் உதவியாளர் தேவை.
சம்பளம் :- 35,000/-
உணவு மற்றும் தங்குமிடம் வழங்கப்படும்.

Location :- S.A.W & Sons, Hambantota
Contact :- **077 480 3379**

# கறுப்பு ஜூலைக் கலவரம் லண்டனில் நினைவு

ஈழத்தமிழர்களின் வரலாற்றில் மறக்கமுடியாததும் அரச பயங்கரவாதத்தின் அனுசரணையுடன் இடம்பெற்றதுமான 1983 ஜூலைக் கலவரத்தின் 41 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வும் அஞ்சலி நிகழ்வும் புலம்பெயர் தமிழ் மக்களாலும், தமிழ் இளையோர்களாலும் லண்டன் மாநகரில் முன்னெடுக்கப்பட்டது.

பிரித்தானிய தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவும் ஐக்கிய இராச்சியத்தின் தமிழ் இளையோர் அமைப்பும் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வு லண்டன் பாராளுமன்ற சதுக்கத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் புலம்பெயர் தமிழர்கள் உணர்வெழுச்சியுடன் கலந்துகொண்டு இலங்கை அரசினை கண்டிக்கும் கோஷங்களை எழுப்பியதுடன், இலங்கை அரசைத் தண்டிக்குமாறும் கோரிக்கை விடுத்தனர். (ப-27)

**வங்கி மீதி வசதி (SHOW MONEY)**

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்

தொடர்புகளுக்கு:
**074 173 7684**

(CS/988) V-1

**தவறவிடப்பட்டுள்ளது**

கைலாசபிள்ளையார் கோவிலடிக்கும் – திருநெல்வேலிக்கும் இடைப்பட்ட பகுதியில் நேற்றுமுன்தினம் மாலைவேளை பச்சை நிறமுடைய புடைவை தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்
தொடர்பு: 0777579812

பங்களாதேஷ் போராட்டத்துக்கு

# ஆதரவளித்த 57 பேருக்கு அமீரகத்தால் கடூழியச் சிறை

கொழும்பு, ஜூலை 25

பங்களாதேஷில் இடம்பெற்று வரும் மாணவர் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவித்து ஐக்கிய அரபு அமீரகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 57 பங்களாதேஷ் பிரஜைகள் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 53 பேருக்கு பத்து ஆண்டுகள் சிறைத்தண்டனையும், ஒருவருக்கு 11 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், மூவருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டுள்ளதாக ஐக்கிய அரபு அமீரக அரச செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

ஐக்கிய அரபு அமீரக சட்டங்களை மதித்து நடக்குமாறும், சட்டத்தை மீறுவோரின் விசா இரத்துச் செய்யப்படுவதுடன் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப் படலாம் எனவும் அபுதாபியிலுள்ள பங்களாதேஷ் துணைத்தூதரகம் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டம் தொடர்பான காணொலிகளையோ புகைப்படங்களையோ பதிவிடவேண்டாமெனவும் தெரிவித்துள்ளது. சுமார் ஒரு மில்லியன் பங்களாதேஷிகள் ஐக்கிய அரபு அமீரகத்தில் அமைதியாக வாழ்ந்து வருகின்றனர். ஒரு சிலரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதாகவும் பங்களாதேஷ் துணைத்தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-25,6)

# சிறையில் உயிர்நீத்தோர் நினைவேந்தல் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 25

இலங்கை சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு காலகட்டங்களில் சாவைத் தழுவிய, தமிழ் அரசியல் கைதிகளை நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தும் நிகழ்வு, இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3.05 மணிக்கு, யாழ்ப்பாணத்திலுள்ள 'தந்தை செல்வா கலையரங்கில்' நடைபெறவுள்ளது.

நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், அரசியல் கைதிகளின் பெற்றோர் மற்றும் உறவினர்கள், முன்னைநாள் அரசியல் கைதிகள், சர்வகட்சி அரசியல் பிரதிநிதிகள், சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள், பல்கலைக்கழக மாணவ மற்றும் ஆசிரிய சமூகத்தினர், ஊடகத்துறை சார்ந்தவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ப-27-66)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் கறுப்பு ஜூலை நினைவு

யாழ்.பல்கலையில்கறுப்பு ஜூலையின் 41 ஆவது ஆண்டு இனப் படுகொலை நினைவேந்தல் நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் பொதுநினைவுத் தூபியடியில் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு ஜூலை இனக் கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட அனைத்துத் தமிழ் உறவுகளையும் நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தினர். (ப-66)





இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org